
தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

மரம் 10 நவம்பர் 2010 கனி 12

# யாக்கோபின் கிணறு

# Jacob's Well



1. இது சமாரியாவிலுள்ள சீகார் என்னப்பட்ட ஊரிலிருந்தது. (யோவான் 4:5)
2. இது 'பாரம்பரிய கிணறு'. பிரயாஹூ^ப என்ற இது நீரூற்றாகவும், தண்ணீர் தொட்டியாகவும் முக்கிய வணிக வழி சேருமிடத்தில் அமைந்துள்ளது. 135 அடி ஆழமுள்ள ஒரு கிணறு.
3. இந்த இடத்தில் ஒரு ஸ்பைசன்டைன் சபை கட்டப்பட்டு அது மறுபடியும் போர்களின் போது கட்டப்பட்டது.
4. நவீன கிரேக்க ஆர்த்தடாக்ஸ் சபை இன்னும் கட்டி முடிக்கப்படாமலிருக்கிறது
5. இந்த பகுதியை யாக்கோபு 100 வெள்ளிக்காசுக்கு ஏமோரின் புத்திரர் கையிலே வாங்கினார். (ஆதி. 33:19)


## கிறிஸ்துவின் வசனம்

*வழங்கும்*

**தொலைக்காட்சி நிகழ்ச்சி**





தமிழன் TV யில் திங்கள் காலை 6.00-6.15
இமயம் TV யில் புதன் காலை 6.30-6.45

*ரேடியோ நிகழ்ச்சி*

இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு சனி மாலை 5.30 முதல் 5.45 மணி வரை
கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்





Website: www.thewordofchristindia.com


"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# திவேர்ட் ஆப் கிறைஸ்ட்

## THE WORD OF CHRIST


புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 10 நவம்பர் - 2010 கனி - 12


ஆசிரியருரை

# பிரதான கற்பனை

## The Great Commanment



ஆண்டவர் பிரதான கற்பனையைக் குறித்து போதிப்பதற்குக் காரணம் இருந்தது. அது என்னவென்றால், முற்பிதாக்களுக்கு கர்த்தர் மோசேயின் மூலமாக கொடுத்த அந்த முதலாம் கட்டளையில் அவர்கள் நிலைத்திருக்கவில்லை. இதுகுறித்து எபிரெய ஆசிரியர் குறிப்பிடுகையில்: "அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப் போல இது இருப்பதில்லை: அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே. நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்று எபி.8:9-ல் படிக்கிறோம். ஒரு ஆசிரியர் பாடம் படித்து வரச்சொன்னால் மாணவர் ஆயத்தமாக படித்துவருகிறார்கள். இது எதைக் காண்பிக்கிறது ஆசிரியருக்கு மாணவர் கீழ்ப்படிந்து செயல்படுவதைக் காண்பிக்கிறது. ஆனால் இஸ்ரவேல் மக்களோ கர்த்தர் கொடுத்த உடன்படிக்கையில் நிலைநிற்கவில்லை. அதற்கு அநேகர் கீழ்ப்படியவுமில்லை. வணங்கா கழுத்துள்ளமக்களாக வழி விலகிப்போனார்கள். மேலும், உடன்படிக்கையில் வார்த்தைகளை எழுதிக்கொடுத்த கர்த்தருக்கு எரிச்சலை மூட்டினார்கள். ஓசியா தீர்க்கன் மூலமாக கர்த்தர் பேசும்போது: "என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன்: அவைகளை அந்நியகாரியமாக எண்ணினார்கள்" என்கிறார் (ஓசி.8:12). யாருக்கோ, எவருக்கோ என்பதைப்போல கர்த்தர் தன்னுடைய விரலினால் எழுதிக்கொடுத்த கட்டளைக்கு கீழ்ப்படியாமல் அதை அவமாக்கிப்போட்டார்கள். இஸ்ரவேலை உண்டாக்கின தேவன், கிருபையும், மகத்துவமும் உள்ள தேவனாயிருந்தபடியால், அவர்கள் வெகுவாய் அவருக்கு

விரோதமாக நடந்தபோதிலும் அநேக தீர்க்கதரிசிகளைக் கொண்டு அவர்களை எச்சரித்து வழிநடத்திக்கொண்டுவந்தார். அவர் தமது கிருபையின்படி அவர்களை இரட்சிக்க இரக்கமுள்ளவரானார். "ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து. அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக. புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்" (எபி.9:15). இந்த புது உடன்படிக்கை புதிதும் ஜீவனுமான மார்க்கத்தில் ஏற்படுத்தப்பட்டது.

வேதபாரகரில் ஒருவன் இயேசுவிடம் வந்து கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்று கேட்டான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால். இஸ்ரவேலே கேள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும். உன் முழு ஆத்துமாவோடும். உன் முழு மனதோடும். உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே: இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார்" (மாற்.12:30.31). இந்த கற்பனையை அறிந்த வேதபாரகனிடத்தில் ஆண்டவர் இப்போதனையை எடுத்துரைத்தார். அவனோ. ஒரு இஸ்ரவேலன். இஸ்ரவேலர்கள் கற்பனையைக் கைக்கொண்டு நடக்கவேண்டும். ஆனால் அந்த உடன்படிக்கையில் அநேகர் நிலைநிற்கவில்லை என்பதை நாம் முன்பு தியானித்தோம். ஆகையால் அவனைப் பார்த்து: இஸ்ரவேலே கேள். என்று சொல்லி தம்முடைய போதகத்தை துவக்கி. உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும்.உன் முழு ஆத்துமாவோடும். உன் முழு மனதோடும். உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை என்பதை அவனுக்கு நினைப்பூட்டினார். அன்பு சகோதரனே. நீயும் உன்னுடைய வாழ்நாட்களில் உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடு அன்பு செலுத்து. அவர் உன் சிருஷ்டிகர் என்பதை ஒருநாளும் மறந்துபோகாதே. மோசேக்கு கர்த்தர் கொடுத்த அந்த முதலாம் உடன்படிக்கையில் நாம் இப்படியாக வாசிக்கிறோம். "என்னிடத்தில் அன்புகூர்ந்து. என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவரா யிருக்கிறேன்" என்கிறார் (யாத்.20:6). அந்த கற்பனையை அன்று கைக்கொண்டவர்களுக்கு மட்டுமல்ல: ஆயிரந்தலைமுறைக்கும் அந்த இரக்கம் நீடித்தது. இந்த இரக்கத்தை நாம் ஆபிரகாம் வழியில் விசுவாசத்தின் மூலமாகவும். மற்றும் இயேசுவை ஏற்றுக்கொண்டதின் மூலமாக பெற்றுக்கொள்கிறோம். மேலும். அவருடைய இரக்கத்தை பெற நீங்கள்

ஒவ்வொருநாளும் பரிசுத்தவேதாகமத்தை நாடுங்கள். அதில் சொல்லப்பட்ட புதிதும் ஜீவனுமான உடன்படிக்கைக்கு செவிகொடுத்து கீழ்ப்படியுங்கள். வேதபாரகனாகிய எஸ்றா: "கர்த்தருடைய வேதத்தை ஆராயவும் அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதி நியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்" என்று எஸ்.7:10-ல் வாசிக்கிறோம். இஸ்ரவேலிலே அநேகர் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போனபோதிலும் எஸ்றாவைப்போல் சிலர் கர்த்தருடைய வேதத்தை ஆராயவும் அதின்படி செய்யவும் தங்களுடைய இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்ததை காண்கிறோம். அதைப்போல புதியஏற்பாட்டுகாலத்திலும் குறிப்பாக முதல்நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் அதாவது பெரோயா பட்டணத்தார்கள் "மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள் என அப்.17:11-ல் படிக்கிறோம்.

இன்றைக்கு அன்பு கூருகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் கர்த்தருடைய கற்பனைக்கும் கட்டளைக்கும் கீழ்ப்படிந்து செயல்படுகிறார்களா என்று பார்க்கும்போது, இல்லை. இது குறித்து யோவான் குறிப்பிடுகையில்: "நாம் தேவனுடைய கற்பனைகளைக்கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல" (1யோவா.5:3). அன்பு செலுத்துகிறேன் என்று ஒருவன் சொல்லி அவன் தேவனுடைய கற்பனையைக் கைக்கொள்ளாதவனாயிருந்தால் அவனிடத்தில் தேவ அன்பு குடிகொள்ளுவதெப்படி? ஆகையால் நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாகும். கொர்நேலியுவைப் பற்றி அப்.10-ம் அதிகாரத்தில் படிக்கிறோம். அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான். கற்பனையைக் கைக்கொள்ளுகிறவன் இந்த கொர்நேலியுவைப்போல் இருக்கவேண்டும். கொர்நேலியு இத்தாலியா பட்டாளத்தில் நூற்றுக்கு அதிபதி. அதிபதியாக இருப்பது என்பது ஒரு சாதாரண விஷயமல்ல. ஒரு பொறுப்புள்ள வேலை. அந்த வேலையில் அவனுக்கு இடையூறுகள், எதிர்ப்புகள் இருந்திருக்கலாம். இன்றைக்கு ஒரு சிலர் சொல்வதைப்போல பட்டாளத்தில் எல்லாம் தேவனை தொழுதுகொள்ள முடியாது என்பார்கள். அப்படிப்பட்ட ஒரு கட்டுப்பாடு இருந்திருக்கலாம். ஆனால் அவன் தேவபக்தியுள்ளவனாயும், குடும்பத்துடன் பயபக்தியுள்ளவனாயும் மிகுந்த தானதர்மங்களை செய்து கொண்டு, தான் யார் என்பதையும், தன்னுடைய தேவன்

யார் என்பதையும் ஜனங்கள் மத்தியில் கிரியை மூலம் எடுத்துச் சொல்லுகிறவனாகவும் ஜீவித்து வல்லமையுள்ள சாட்சியாக, இத்தாலியா பட்டாளத்தில் விளங்கியிருக்கிறான். இப்படிப்பட்ட அன்பு உங்களில் இருக்கிறதா? தேவனிடத்தில் முழு இருதயத்தோடு நீங்கள் அன்புகூருகிறீர்கள் என்றால் இந்த கொர்நேலியுவைப்போல குடும்பத்துடன் செயல்படுங்கள்.

ஆண்டவர் வேதபாரகனிடத்தில்: இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே: இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார். தேவனிடத்தில் அன்புகூருவதோடு நிறுத்திவிட்டால் போதாது: உன்னிடத்தில் நீ எப்படி அன்புகூருவாயோ அதைப்போல பிறனிடத்திலும் அன்புகூரவேண்டும் என்ற ஒரு போதனையைக் கொடுத்தார். நமக்கு பசி வந்தால் உடனே சாப்பிடுகிறோம். அதைப்போல பிறன் சாப்பிட்டானா? அப்படிப்பட்டவனை நினைத்து, அப்படிப்பட்டவர்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு என்றாவது உண்டானதா?

லூக்கா ஆசிரியர்: நியாயசாஸ்திரி ஒருவன் இயேசுவை சோதிக்கும்படி கேட்ட கேள்வியை லூக்கா10:25 முதல் குறிப்பிடுகிறார். "அவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய் இயேசுவை நோக்கி: எனக்குப் பிறன் யார் என்று கேட்டான்" அவனுக்கு ஆண்டவர் ஒரு அருமையான சம்பவத்தை சொன்னார்: என்னவென்றால் ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்கு போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவன் வஸ்திரங்களை உரித்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள். அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவனைக் கண்டு,மனதுருகி, கிட்டவந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான். மறுநாளிலே தான் புறப்படும்போது இரண்டு பணத்தை எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்து: நீ இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன் என்றான். இப்படியிருக்க, கள்ளர்கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித்தோன்றுகிறது என்றார். அதற்கு அவன்: அவனுக்கு இரக்கஞ்செய்தவனே என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீயும் போய் அந்தப்படியே செய் என்றார். எப்படிப்பட்டபோதனை பார்த்தீர்களா? பிறன் யார் என்று கேட்காமல் உன்னிடத்தில் அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூர்ந்து **பிரதான கற்பனையை** நிறைவேற்றுங்கள்.

**நாம் மற்றவர்களிடத்தில் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோமா?**

ஆம். "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல. அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து. நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. பிரியமானவர்களே. தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க. நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம் என்று 1யோவா.4:11-ல் வாசிக்கிறோம். மேலும். என் பிள்ளைகளே. வசனத்தினாலும் நாவினாலுமல்ல. கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம் என்கிறார். ஆகையால் கொர்நேலியுவைப்போல தானதர்மங்களை கிரியைமூலமாக காட்டுங்கள். "ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல். மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்: பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்" (ரோம.13:8). நீங்கள் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு செலுத்தும்போது பிரமாணத்தை நிறைவேற்றுகிறவர்களாக இருப்பீர்கள். நாம் இப்பொழுது அன்பின் பிரமாணத்தின் கீழ் வாழ்கின்றோம் என்பதை நினைத்து. அன்புக்கு அடிமைகளாக உங்களை ஒப்புக்கொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## வேதஅறிவுப்போட்டி எண் 122-ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| Mrs.மரகதம் திரவியம் | - கோம்பை |
| M.S.தேவகிருபை | - கோம்பை |
| A.ரெபேக்காள் | - மதுரை |
| N.ஜான் செல்லையா | - மதுரை |
| T.ராஜாத்தி | - கோம்பை |
| R.பவுல் சாமுவேல் | - பிடாரியூர் |
| K.மோகன் | - குமாரபாளையம் |
| G.பூங்கோதை | - வெள்ளபாளையம் |
| Sis.குளோரிஃபவுச்சர் | - சென்னை |
| J.நிர்மலாஜான் | - மதுரை |
| M.ராமச்சந்திரன் | - ஒட்டாநத்தம் |
| R.கஸ்தூரி | -ஒட்டாநத்தம் |
| R.கிப்ட் ராஜாமணி | -ஒட்டாநத்தம் |
| Bro.ஷர்லோ | -பாண்டி |
| M.ரவிஜேக்கப் | -பாண்டி |
| R.சரோஜா | -தென்கலம் |

தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் (லூக்கா10:42)

## வேதஅறிவுப்போட்டி எண் 122-ன் விடைகள்


1. சிம்சோன் -நியா.16:3
2. தாய்களைப்போலவும், எல்லாக் கற்புடன் சகோதரிகளைப் - 1தீமோ.5:2
3. தலைவனாயிருந்தான் - யோசு.22:14
4. பவுல், தீமோத்தேயுவுக்கு - 2தீமோ.2:16
5. மோசே -உபா.29:18
6. பவுல், தீத்து -தீத்து2:12
7. லேவியருக்கு -எண்.35:6
8. பவுல், பிலேமோனுக்கு - பிலே.21
9. மோசே -யாத்.25:2
10. [illegible]

தினம் மூன்று லிட்டர் தண்ணீர் குடிப்பது உடல் நலத்திற்கு நல்லது

# நாம் ஏன் ஆராதனையில் வாய்மொழி பாடலை மட்டும் கட்டாயப்படுத்துகிறோம்

# Why We Have Vocal Music Only In Worship

*J.C.Choate*



**கி**றிஸ்துவின் சபையாராகிய நாம் மற்ற அநேக சமயக் குழுக்களிலிருந்து வேறுபட்டிருக்கின்றோம். ஏனென்றால் நம்முடைய ஆராதனையில் நாம் வாயினால் பாடுகின்றதை மட்டுமே ஏற்றுக்கொள்கிறோம். ஆனபடியினால், நாம் நம்முடைய பாட்டினை இசைக் கருவிகளோடு இணைக்கிறதில்லை. இது வித்தியாசப்படுத்துவதற்காக செய்வதில்லை என நான் தாமதமின்றிச் சொல்வேன். மாறாக, வேதாகமம் இவ்வாறு போதிக்கின்றபடியால், நம்முடைய ஆராதனை வேளைகளில் வாயினால் பாடுகின்றதையே ஏற்றுக்கொள்கிறோம்.

இரண்டு விதமான இசை உண்டு. ஒன்று வாய்மொழியில் பாடுவது இன்னொன்று இசைக்கருவியினால் பாடுவது. வாய்மொழி சங்கீதமானது பாடுகின்ற, இனிமையான ஒலியெழுப்புகின்ற இணக்கமான மனிதக் குரல்களாக, மேலும் உலகத்தில் மிக அழகான சங்கீதமாக வெளிப்படுகின்ற ஒன்றாகும். இந்தவிதமான சங்கீதம் தேவனுடைய படைப்பிலிருந்து வருகிறது. இது ஆத்துமாவிலிருந்து வருகிறது மேலும் நம்முடைய சிருஷ்டிகராகிய தேவனுக்கு துதியாகசெலுத்தப்படுகிறது. இது முழுவதும் ஆவியாயும், ஜீவனாயுமிருக்கிறது. இசைக்கருவியின் இசை மனிதனால் உருவாக்கப்பட்ட இசைக்கருவியிலிருந்து வருகிறது. இவ்வகையான கருவிகள் ஜீவனற்றது. அவைகள் ஆத்துமா அல்லது ஆவியைக் கொண்டிருக்கவில்லை. அக்கருவிகளின் மேல் மனிதன் அடிப்பதினாலும், அவைகளை இழுப்பதினாலும் அல்லது அவைகளை மீட்டுவதினாலுமே அவைகள் ஒலிகளை எழுப்புகின்றதாயிருக்கிறது:. இப்போது இதன் வினாவானது: தேவன் தம்முடைய சிருஷ்கள் தம்மை துதிக்கும்படி விருப்புகிறாரா அல்லது மனிதனுடைய படைப்புகள் தம்மை துதிக்கும்படி விரும்புகிறாரா? எது அவருக்கு மிகவும் கருத்துள்ளதாயிருக்கும்? எபிரெய எழுத்தர், "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" (எபி.13:15) என்கிறார். நாம் நம்முடைய உதடுகளின் கனியினால் தேவனைத் துதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் என அவர் சொல்லுவதை தயவு செய்து

கவனியுங்கள். அது நம்முடைய கனியாக இருக்கும். நம்முடைய பேச்சு. நம்முடைய பாட்டு. நம்முடைய ஜெபங்கள். நம்முடைய துதியின் வார்த்தைகள் போன்றவைகளே நம்முடைய உதடுகளின் கனியாக இருக்கும். யாருக்கு இது செலுத்தப்பட வேண்டும்? நிச்சயமாக. தேவனுக்கே.

நம்முடைய உதடுகளின் கனியினால் தேவனைத் துதிக்கின்றதின் நோக்கத்தைத் தொடர்ந்து பார்க்கையில். பவுல். "சங்கீதங்களினாலும். கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு. உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக்கீர்த்தனம்பண்ணி. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து" (எபே.5:19.20) என்று சொல்லுகிறார். ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு அல்லது பாடிக்கொண்டு. அதாவது பாடல்களின் பல்வேறு வகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பாடிக்கொண்டு என்று சொல்லுவதை தயவுசெய்து கூர்ந்து கவனியுங்கள். அத்தோடுகூட அவைகள் ஆவிக்குரியதாகவும் வேதவசனங்களுக்கேற்றபடியாகவும் இருக்கவேண்டுமென அவர் வலியுறுத்துகிறார். கடைசியாக. அவர் இந்த சங்கீதங்கள் இருதயத்தில் பக்தியுடன் பாடப்படவேண்டும். வாத்தியக்கருவிகளினால் அல்ல என்று குறிப்பிட்டுச் சொல்கிறார். இப்போது கிறிஸ்தவர்கள் பாடிக்கொண்டே இருந்தால் மட்டும். அவர்கள் தேவனை ஆராதிக்கமுடியுமா? ஒருவேளை நீங்கள் ஆம் என்று கூறலாம். ஆனால் வாத்தியக்கருவியோடு பாடுவதுபற்றி என்ன சொல்லலாம்? வேதவசனங்கள் அது பற்றி போதித்தால் அது நன்றாக இருக்கும். ஆனால் வேதவசனங்கள் எங்கே அவ்வாறு போதிக்கிறது? அவ்வாறு வசனங்கள் போதிக்கவில்லையென்றால். நம்முடைய சங்கீதத்திற்கு வாத்தியகருவியின் இசையைக்கூட்டினால். அப்புறம் நாம் கர்த்தருடைய சித்தம் செய்கின்றவர்களாயிருப்போமா?

மீண்டும் பவுல். "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக: சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு. உங்கள் இருதயத்திலே கர்த்தரைப்பக்தியுடன் பாடி" (கொலோ.3:16) என்கிறார். இங்கே பவுல் என்ன சொல்கிறார்? அவர் ஆவிக்குரிய மற்றும் ஞானப்பாட்டுகளினாலும் வார்த்தையினாலும் போதித்து புத்திசொல்லிக் கொண்டு கர்த்தரைத் துதித்துப்பாடுவதின் மூலம் கிரியை நடப்பியுங்கள் என்று **கிறிஸ்துவின் வசனத்தை** வலியுறுத்திச் சொல்கிறார். அதுவே உண்மையாயிருக் கின்றது. பவுலுடைய கூற்றில் வாத்தியகருவி இசையை சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதாக காண்கிறீர்களா? இல்லையென்றால். ஆராதனையில் தேவனை ஸ்தோத்தரித்துப்பாட வாத்தியக்கருவி இசையை இணைக்கும்படி தொடர்வீர்களானால் நீங்கள் தேவனுடைய வார்த்தையோடு கூட்டிக் கொண் டவர்களாயிருக்கமாட்டீர்களா?

ஆனால் இதனால் ஒன்றும் தவறில்லையென நீங்கள் விவாதிக்கலாம்.

பிறகு யாரும் எந்தகாரியத்திலும், வேறொன்றிலும் இதில் தவறொன்றையும் காணவில்லை எனத் தொடர்ந்து கூறலாம். முக்கிய குறிப்பானது, நாம் தேவனுடைய வார்த்தையின் போதனையில் கண்டிப்பாக உறுதியாயிருக்க வேண்டும். நாம் அவ்வாறு இல்லையென்றால், பிறகு ஏன் எப்படியாகிலும் இது குறித்து கலங்குகிறீர்கள்?

இது எனக்குப்பிடிக்கிறது அல்லது வாத்தியக்கருவியை மீட்டும் தாலந்தையும் திறமையையும் பெற்றிருக்கிறவர்கள் பற்றிய காரியமென்ன? என்றும் நீங்கள் வாக்குவாதத்துடன் திரும்பவும் வரலாம். அவர்கள் வாத்தியக்கருவிகள் மூலம் சங்கீதம் பாடிக் கர்த்தரை ஸ்தோத்தரித்தால், தேவன் அதனால் மகிமைப் படுத்தப்படமாட்டாரா? மீண்டும் நான் என்ன விரும்புகிறேனோ அதுபற்றிக் கவலை இல்லை, ஆனால் இது தேவன் என்ன விரும்புகிறாரோ அது பற்றியதாகும். ஒருவர் வாத்தியக்கருவியை இசைக்கும் தாலந்து அல்லது திறமை பெற்றிருந்து, அதன் அடிப்படையில் தேவனைத் துதிக்கும்படி அவன் வாத்தியக்கருவியை இசைக்க அனுமதிக்கப்படவேண்டுமானால், அந்த தாலந்துகளையும், திறமைகளையும் பெற்றிராத மற்றவர்கள் பற்றிய காரியம் என்ன? அந்தத் திறமைகளைக் கர்த்தருக்குக் கொடுக்கவேண்டுமென அப்பேர்பட்ட திறமைகளை ஆராதனைக்குள் திறமையற்ற அவர்கள் கொண்டுவரவேண்டுமென நாம் வாதிப்போமா? இந்தக் குறிப்பை நீங்கள் கவனிப்பீர்களென நான் நினைக்கிறேன்.

நீங்கள் வாத்தியக் கருவி இசையை வீட்டில் கொண்டிருந்தால் நிச்சயமாக நீங்கள் ஆராதனையில் அதை பயன்படுத்தலாம் என மீண்டும் இது விவாதிக்கப்படுகிறது. உண்மை என்னவென்றால், நம்மால் ஆராதனைக்குள் கொண்டு செல்ல இயலாத அநேக பொருட்கள் வீட்டில் காணப்படுகிறது. என்னுடைய குடும்பமும் நானும் இசையை விரும்புகிறோம், நாங்கள் வானொலியில், அல்லது கேசட் ரிக்கார்டில் இசையை உற்றுக்கேட்பது வழக்கம், ஆனால் ஆராதனைக்கு இது வரும்போது எங்களைப் பிரியப்படுத்துகிற அந்த காரியங்களை நிறுத்தி விட்டு, கர்த்தரைப் பிரியப்படுத்துகிற காரியத்தையே செய்ய ஆரம்பிக்கிறோம். நாம் வீட்டில் ஐஸ்கிரீம் சாப்பிடவும், ஐஸ் டீ சாப்பிடவும் விரும்புகிறோம், ஆனால் இந்தக் காரியங்களெல்லாம் ஆராதனைக்கு வெளியே செய்யப்பட வேண்டியதென நாம் உணருகிறோம்.

பழைய ஏற்பாட்டில் தாவீதும் மற்றவர்களும் இதைப் பற்றி போதித்தார்களென உரிமைபாராட்டி ஆராதனையில் வாத்தியக் கருவி இசையைப் பயன்படுத்துவதை ஆதரிப்பது முக்கியமான வாக்குவாதங்களில் ஒன்றாயிருக்கிறது. அவ்வாறு இருந்ததோ இல்லையோ, பழைய ஏற்பாடு பிரமாணம் தொடர்ந்து நிலைத்திருக்கவில்லை என்பது உண்மை, ஏனென்றால் கிறிஸ்து அதை எடுத்துப் போட்டு ஒரு புதிய பிரமாணத்தைக் கொடுக்கும்படி சிலுவையில் மரித்தார். அதை நாம், "…. நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க கொடுக்கப்பட்டது,

கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" (யோவா.1:17) என வாசிக்கிறோம். கிறிஸ்து நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் ஒழிந்து போகாது என்று சொன்னார் (மத்.5:17,18). கிறிஸ்து சிலுவையின் மேல் மரித்தபோது அதை நிறைவேற்றினார். இவ்வாறாக பழைய பிரமாணத்தை நடுவிலிராதபடிக்கு எடுத்துப்போட்டார் (கொலோ.2:14). இந்தக் காரியம் இவ்வாறிருக்கையில், நாம் சங்கீதத்தை அல்லது பழைய ஏற்பாட்டின் மற்ற பகுதியை இன்று ஆராதனையில் வாத்தியகருவி இசையை நியாயப்படுத்துவதற்கு பயன்படுத்த முடியாது. நம்முடைய தற்போதைய காலத்தில் செய்யாத மற்றும் செய்ய இயலாத பல காரியங்கள் அப்போது செய்யப்பட்டது.

இதை நியாயப்படுத்தும் முயற்சியில் இன்னொரு முக்கியமான வாக்குவாதம், பரலோகத்தில் இசைக் கருவி பயன்படுத்தப்படும் என்பதாகும். பரலோகத்தில் இசைக்கருவி இருக்குமானால், நிச்சயமாக நாம் இந்த பூமியிலே ஆராதனையில் இசைக் கருவி பயன்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம் என அவர்கள் தீர்மானிக்கின்றனர். உண்மையாகவே அவர்கள் வாத்தியக்கருவியைப் பற்றிபேசிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் நேரடியான மனிதனால் உருவாக்கப்பட்ட, இயந்திர இசைக்கருவிகள் இருக்குமென வெளிப்படுத்தின விசேஷப்புத்தகத்தில் அல்லது வேறெங்கே வாசிக்க முடிகிறது? ஆனால் அப்படியே வாத்தியக்கருவியின் இசை இருக்குமானால், இன்று ஆராதனையில் அதை பயன்படுத்தும்படி நமக்கு கர்த்தர் அனுமதியளித்துள்ளார் என அர்த்தமாகிறதில்லை. பூமியிலே நாம் பெற்றிராத அநேகப் பொருட்கள் பரலோகத்தில் உள்ளன என்பது உண்மையான விஷயம். தேவன் குறிப்பாக ஆராதனையில் இன்று என்ன எதிர்பார்க்கிறார், மேலும் கடைசியாக பரலோகத்தில் தோற்றமளிக்கிற இருவேறுபட்ட பொருட்கள் என்ன?

வேதாகம வித்துவான்களும், பெரிய மதத்தலைவர்களும் பல வருடங்களுக்கு மேலாக வேதவாக்கியங்கள் மற்றும் வேறு குறிப்புகள் போன்ற இரண்டிலுமிருந்தும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ஆராதனையில் வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தினார்கள் என்பதற்கான எந்த குறிப்பும் இல்லையென ஒத்துக்கொண்டுள்ளனர். ஆனபடியினால் இந்த தலைவர்களில் பலர் அவர்களுடைய நாட்களிலும் மற்றும் நம்முடைய நாட்கள் வரைக்கும் தேவனை ஆராதிக்கையில் ஜனங்கள் வாத்தியக்கருவிகளைப் பயன்படுத்தவில்லை என்று தீர்மானித்தார்கள். உதாரணமாக, கத்தோலிக்க சபை இறுதியாகப் பிரிந்தது, இந்த பிரிவு தேவனைத் துதிப்பதில் வாத்தியக்கருவி இசை தங்களுடைய பாடல்களில் இடம்பெறவேண்டுமா என்ற கேள்வியை கொண்டுவந்தது என்பது பல காரியங்களில் ஒன்று. அந்தக் குழு இது சேர்க்கப்பட வேண்டுமென நினைத்து, ரோம கத்தோலிக்க சபையாக மாறியது, ஆகவே அவர்கள் இன்றுவரை அதை பயன்படுத்திவருகிறார்கள். இன்னொரு குழு வாத்தியக்கருவி இசையை பயன்படுத்த

மறுத்து, கிரேக்க ஆர்த்தடாக்ஸ் சபை என மாறியது. அவ்வாறாக இவர்கள் இன்று வரை தங்கள் ஆராதனை வேளைகளில் அவைகளைப் பயன்படுத்துகிறதில்லை. அதற்கப்புறம், சீர்திருத்தலும் பிராட்டஸ்டண்ட் இயக்கங்களிலும், ஜான் வெஸ்லி போன்ற மனிதர்கள், தேவன் தம்முடைய பரிசுத்த வார்த்தைகளில் முன்குறிக்கப்பட்டுள்ளபடி ஆராதனைக்குரிய தேவனுடைய தெய்வீக திட்டதில் இப்பேர்பட்ட வாத்தியக்கருவி இசையை சேர்ப்பதற்கு தங்களுடைய எதிப்பைத் தெரிவித்தனர்.

தேவனுடைய வார்த்தைக்குத் திரும்புகையில், நாம் வாசிக்க வேண்டிய அநேக வேத வசனங்கள் உள்ளன. கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்பட்ட பிற்பாடு கர்த்தரும், சீஷர்களும் உருவாக்கிய ஒரு கூற்றுடன் ஆரம்பிப்போம். “அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்” (மத்.26:30) என வாசிக்கிறோம். பிறகு பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு கால்கள் தொழுமரத்திலே மாட்டப்பட்டு அவர்கள் உட்காவலறையிலே அடைக்கப்பட்டார்கள். இவைகளெல்லாம் கர்த்தருக்கு ஊழியம் செய்ததினால் ஏற்பட்டது. இது, “நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந் தார்கள்” (அப்.16:26) என்று செல்கிறது. பவுல் கொரிந்துப்பட்டணத்து கிறிஸ்தவர் களுக்கு “என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்” (2கொரி.14:14,15). என்று எழுதினார். யாக்கோபு, “உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்” (யாக்.5:13) என்றார். வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் சங்கீதம் பாடுவது பற்றி பல கூற்றுகள் உள்ளன. யோவான், “தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்றும் “அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியான வருடைய பாட்டையும் பாடி சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான் களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்” (வெளி.15:3) என்று எழுதினார். முன்பு அறிவித்தபடி வெளிப்படுத்தின விசேஷம்

எவ்வாறு யோவான் பரலோகத்தில் சத்தத்தைக் கேட்டான் என்பது பற்றியும் கூறுகிறது. "...... நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தாங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப் போலிருந்தது" (வெளி.14:2) என்றான். ஆனால் தயவு செய்து கவனியுங்கள் அவன் பெருவெள்ள இரைச்சல்போலவும். பலத்த இடிமுழக்கம்போலவும் ஒரு சத்தத்தையும் கேட்டான் மேலும் அவன் நான்கு மிருகங்களைக் குறித்து பேசுகிறான். "..... பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்துநாலாயிரம்பேரே..." (வெளி.4:2,3). இங்கே வெளிப்படுத்தின புத்தகம் முழுவதும். யோவான் தான் பரலோகத்தில் என்ன பார்த்தான். என்ன கேட்டான் என்பதைப் பற்றி மனிதனுக்குத் தெரியப்படுத்தும் முயற்சியில் பல எண்ணிக்கையிலான அர்த்த விசேஷபாஷையைப் பயன்படுத்துகிறான். ஆனபடியினால் அவன் பெருவெள்ள இரைச்சல் போலவும். பலத்த இடிமுழக்கம் போலவும். சுரமண்டலக்காரர் வாசிக்கிற சுரமண்டல ஓசையைப் போலவும் கேட்டான். ஆனால் பரலோகத்தில் நேரடியான. பூமிக்குரிய. வாத்திய கருவிகள் தான் இருந்தன என்பதாக அவன் அர்த்தப்படுத்தவில்லை.


சங்கீதம் பாடுவது அல்லது தேவனை ஆராதிக்கையில் நம்முடைய பாட்டுடன் வாத்தியக்கருவியின் இசையைக் கொண்டிருத்தல் போன்ற காரியத்தோடு. இது பிரமாணத்திற்கடுத்த ஒரு காரியமாகும். வேதாகமம் எங்கு பேசுகிறதோ அங்கே பேசுவோம். அது எங்கு அமைதியாயிருக்கிறதோ அங்கே அமைதியாயிருப்போமா அல்லது தேவன் சொல்லியிருக்கிறவற்றிற்கு புறம்பாக நாம் என்ன செய்ய விரும்புகிறோமா. அதை தொடர்ந்து செய்வோமா? வேதாகமம் கிறிஸ்து பரலோகத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் கொண்டவராயிருக்கிறாரெனவும் ஆனபடியினால் அவர் பேசியிருக்கிறார் எனவும் கூறுகிறது. ஆகவே நாம் அவருக்கும் அவருடைய வார்த்தைக்கும் கனத்தை செலுத்தி அவர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு மாறாக வேறொன்றையும் செய்யக்கூடாது. ஆனபடியினால் நாம் ஆராதனையில் வாய்மொழி சங்கீதம் அல்லது பாட்டு பாடுவதற்கு மட்டும் இடமளிக்க நம்முடைய இசைக் கருவி இசையைக் கட்டுப்படுத்தவேண்டும். அதன்பின் மட்டுமே. தேவன் அதில் பிரியமாயிருப்பாரென நிச்சயமுடையவர்களாயிருக்க முடியும்.

நீங்கள் எவ்வாறு தேவனை ஆராதிக்கிறீர்கள்? இது நீங்கள் அறிய வேண்டிய காரியம். நீங்கள் கிறிஸ்தவரா? இல்லையென்றால் நீங்கள் கிறிஸ்தவராக மாற நாங்கள் விரும்புகிறோம். கிறிஸ்து. "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்....." (மாற்.16:16) என்றார். அதன் பின் கர்த்தர் இரட்சிக்கப்படுகிறவர்களை சபையிலே சேர்க்கிறார் என வாசிக்கிறோம் (அப்.2:47) இரட்சிக்கப்பட்ட ஒரு நபராக. கர்த்தருடைய சபையில் ஒரு அங்கத்தினனாக. தேவனை ஆவியோடும் உண்மையோடும் நீங்கள் தொழுது கொள்ள முடியும் (யோவா.4:24).

பெண்கள் பகுதி

# இயேசு கிறிஸ்து, நித்திய பலி
# Jesus Christ, the Eternal Sacrifice

*-Betty*



## பண்டிகைகளின் நோக்கம்
## The Purpose of the Feasts

பஸ்கா பண்டிகை மற்றும் இஸ்ரவேலர் தங்களுடைய பாவங்களுக்காகச் செலுத்த வேண்டியிருந்த மிருகபலி போன்றவற்றின் நோக்கத்தைக் கற்றுக்கொள்ள நாம் வேத வாக்கியங்களை உற்று நோக்கும் வேளையில், அவைகள் எகிப்திலிருந்து யாத்திராகமத்திற்கும் தேவனால் பரிசுத்தமடைவதற்கும் மீண்டும் சுட்டிக்காட்டுகின்ற நினைப்பூட்டுகிறவைகள் மாத்திரமல்ல என நாம் உணருகிறோம்; அவைகள் வரப்போகிற பஸ்கா ஆட்டுக்குட்டியையும் இயேசு கிறிஸ்து என்பவரிலுள்ள பாவ-பலியையும் குறித்த தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட விஷயங்களாயிருந்தன. இன்று செய்யப்படுகிறதான கிறிஸ்துவின் மரணத்தின் நினைவு கூருதலாக சபைக்குக் கொடுக்கப்பட்ட அந்த நினைவு விருந்து பழைய ஏற்பாட்டின் விருந்தைப் போன்றதே ஆகும்; இது சிலுவைக்குக் கொண்டு சென்று அவருடைய வருகையை எதிர்நோக்கியிருக்கப்பண்ணுகிறது. "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1கொரி.11:26).

**கர்த்தருடைய பந்தியின் அறிமுகம்**

இந்தப் பந்தியின் ஆரம்பம் என்ன?

"வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்லதரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, "பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது: என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்...." (லூக்.22:14-16,19,20).

முன்பதாக, இந்த நினைவு விருந்தைக் குறித்து ஒரு தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட விஷயத்தில், இயேசு இவ்வாறு சொல்லியிருந்தார்:

"நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்: இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்: நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்...... நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை..... என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்" (யோவா.6:51-54) என்றார்.

சிலர் இயேசு ஆவிக்குரிய உணவின் மறைபொருளாக பேசிக்கொண்டிருந்தாரென கருதலாம்: உண்மையாகவே, ஜீவனுக்கான அப்பத்தைப் பற்றிய அவருடைய உரையாடல் அவருடைய போதனையின் ஆரம்பத்தில் அந்தப் பொருளைக் கொண்டிருந்தது. இதைப்போலவே யோவான்4:10-14-ல் சொல்லப்பட்ட வார்த்தைகளும் இந்த விவாதத்தில் ஜீவத் தண்ணீரென இயேசு அழைத்த ஆவிக்குரிய போஷாக்கைப்பற்றிய விஷயத்தோடு சம்பந்தப்படுகிறது. இந்த இரு பகுதிகளில் தாமே ஜீவ அப்பமும் ஜீவத்தண்ணீருமாயிருக்கிறாரென சொல்லுவதில் அவர் அவைகளைத் தமக்கு மறைபொருளாக வைத்தார்.

இயேசு தம்முடைய சீஷர்கள் தம்முடைய மாம்சத்தைப் புசித்து தம்முடைய இரத்தத்தைப் பானம்பண்ணவேண்டுமெனச் சொன்னார்.

ஆனால் இந்த உதாரணத்தில், இயேசு அப்பம் (தண்ணீர் இன்னும் மற்றவை) உருவணியாக வைக்கப்பட்ட இடத்தில் ஆவிக்குரிய உணவைப் பற்றிய கருத்திலிருந்து விலகி சொற்களுக்கு நேரடியான பொருளை உடையதாய் இருக்கக் கூடாததும் பிரத்தியேகமாக சொற்களின் வடிவமாகக் கருதக் கூடாததுமான வசனப் போக்கிற்குத் திரும்பினார். அவர் **தம்முடைய சீஷர்கள் ஜீவனைப் பெற்றிருக்க தம்முடைய மாம்சத்தைப் புசித்து தம்முடைய இரத்தத்தைப் பானம் பண்ண வேண்டுமென** சொன்னார். ஏனென்றால் கவனித்துக் கேட்கிறவர்கள் புரிந்துகொள்ளமுடியாத இப்பேர்பட்ட **சூசகமான** ஆழமான கூற்றிற்கு மறைபொருளாகவுங்கூட ஒப்பானதொன்றுமில்லை. மேலும் "....அது முதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்" (யோவா.6:66).

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கப்புறம், சிலுவையில் பலியிடப்பட்ட அவருடைய சரீரத்தின் வாராந்திர நினைவுகூருதல்களை இன்றைய உலகில் வாழ்கின்ற விசுவாசிகள் அவருடைய கூற்றினை தோற்றத்தில் கண்டு அவர் சொல்லிய முழுக் கருத்தினையும் சரியாக புரிந்து கொள்ளமுடியும். **அவர்**

**தம்முடைய மரணத்தின் நினைவுகூருதலாகயிருப்பவற்றை தொடங்கவிருக்கும் ஆவிக்குரிய விருந்தைக் குறித்த கருத்தினை அவர் அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார்** அந்த நிகழ்ச்சியின் போதும் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இரவிலும் அவர் **பங்கு கொள்ளவிருக்கிற தம்முடைய சரீரத்தைக்குறித்தும் இரத்தத்தைக்** குறித்தும் பேசினார். இந்த ஒத்த சொற்றொடர் நிதானமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவருடைய நாளில் கவனித்துக்கேட்டு இரத்தம் புசிப்பதை அனுமதிக்காத பழைய ஏற்பாட்டு கட்டளைக்கு பழக்கப்பட்டு போனவர்களுக்கு இயேசுவின் கூற்று வெறுப்பூட்டுகின்ற சமயக்கொள்கைக்கு மாறுபட்ட கருத்தாக இருந்திருக்கவேண்டும். அவர் இதை அறிவார் ஆயினும் அந்த பூரணமான அறிவுள்ள சத்தியங்கள் உருவாக்கப்பட அந்த அறிமுகம் அவசியமாயிருந்தது.

**உடன்படிக்கையின் அப்பம்**

அவருடைய சிலுவைப்பாடுகளுக்கு முன்பு அப்பத்தை எடுத்து அவர், "..வாங்கிப்புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது..." (மத்.26:26) என்றார்.

இந்த பாடங்களைக் கற்றுக்கொடுக்கும்படிக்கு, இந்த எண்ணங்கள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக எழுகின்றன:

(1) "இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது: என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்" (லூக்.22:19).

(2) "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து..." (1கொரி.11:26).

ஆதி கிறிஸ்தவர்கள் நினைவு விருந்துகளுக்கான இரண்டு எடுத்துக் காட்டுகளைக் கொண்டிருந்தனர்: **ஓய்வுநாள்தோறும்** கர்த்தருடைய சந்நிதியில் அடுக்கிவைக்கப்படும் நித்திய உடன்படிக்கைக்குரிய அப்பம் (லேவி.24:5-9) மற்றும் **வருடந்தோறும்** கைக்கொள்ளவேண்டியிருந்த பஸ்காவாகிய அப்பம். இன்று கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கைவைத்துள்ள பிரிவினை சபை அங்கத்தினர்கள் அவருடைய நினைவுகூருதலில் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வருடத்திற்கொருமுறை பங்குகொள்கின்றனர். மேலும் புளிப்பில்லா அப்பத்திற்கும் திராட்ச ரசத்திற்கும் பதிலாக மற்ற பொருட்களை வைப்பது அசாதாரணமாக இருப்பதில்லை.

ஆனால் பழைய ஏற்பாட்டு கட்டளையின் கீழ் அடிக்கடி வருகின்ற அவர்களுடைய விருந்து அல்லது அவர்களோடு சம்பந்தப்பட்டிருந்த பொருட்கள் போன்றவற்றினிடையே தொந்தரவு ஏற்பட்டிருக்கவில்லை. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தேவன் தம்முடைய குமாரனின் நினைவுகூருதலை எத்தனை முறை கடைப்பிடிக்க விரும்புகின்றார் என்பதைப்பற்றிய அவர்களுடைய புரிந்துகொள்ளுதலில் மிகத் தெளிவாக இருந்தனர். மேலும் அவர்கள் அவருடைய சரீரத்தையும் அவருடைய இரத்தத்தையும் குறிக்கும் மாதிரிகள் எவை என்பதையும் தெளிவாக அறிந்திருந்தனர்.

இன்று உண்மைக் கிறிஸ்தவர்கள் இதே மாதிரியையே பின்பற்றுகின்றனர். ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவருவதில் அவர்களுடைய நோக்கம், அப்பம் பிட்குதலிலும் பானம்பண்ணுதலிலும் பங்கெடுப்பதாகவே இருக்கிறது (1கொரி.11:24-26).

(3) “எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, ..... அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், ..... தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்” (1கொரி.11:28,26).

(4) “என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; ....” (யோவா.6:54).

(5) “ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்” (யோவா.6:57)

இந்த விருந்தை சாதாரணமான ஒரு “சடங்காக” நினைப்பவர்கள் தவறிழைக்கின்றனர். இயேசு மிகுந்த ஆழமான கருத்துடனே நிதானமாக பொருட்களை தெரிவுசெய்தார் அத்தோடு இதில் பங்குகொள்ளுகிறவர்கள் இதன் பொருள் தங்களுக்குரியதென புரிந்துகொள்வது அவர்களுடைய பொறுப்பாகவுமிருக்கிறது.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியமே இந்த ஒழுங்கான நினைவுகூருதலில் பங்குகொள்வதில் தான் கட்டப்பட்டுள்ளது. **நாம் ஜீவிக்கின்றோம், ஏனென்றால் நமக்கு ஜீவன் கொடுக்கும்படி அவர் மரித்தார், ஏனென்றால் நம்மில் அவர் ஜீவிக்கிறார்.**

### பொது அறிவுச் சோதனை

1. உலக சுற்றுலாதினம் என்று கடைபிடிக்கப்படுகிறது?
   அ) செப்டம்பர் 27 ஆ) மே 27 இ) ஏப்ரல் 27
2. மலரின் எந்தப் பகுதி கனியாக மாறுகிறது?
   அ) சூல்தண்டு ஆ) சூல்பை இ) சூல்
3. இண்டேலியம் கிடைக்கும் மாநிலம்?
   அ) கோவா ஆ) கொல்கத்தா இ) கேரளா
4. 'பஸதேனா' என்பது என்ன?
   அ) விண்வெளிக்கூடம் ஆ) சுற்றுலா தலம் இ) துறைமுகம்
5. உவமைக் கவிஞர் என அழைக்கப்படுபவர் யார்?
   அ) சுரதா ஆ) பாரதியார் இ) திரு.வி.கா.

விடைகள்:
1. செப்டம்பர் 27
2. சூல்பை
3. கோவா
4. விண்வெளிக்கூடம்
5. சுரதா

**வேதமே வெளிச்சம் – நீதிமொழிகள் 6:23**

## நடப்புச் செய்திகள்

- 2011-ம் ஆண்டின் புதுவரவான த்ரி இன் ஒன் மாடல் டைரிகள் தயாரிப்பு சிவகாசியில் முழு வீச்சில் நடைபெற்றுவருகிறது.
- பஸ்களில் சில்லரை பிரச்சனைக்கு தீர்வு காண 'காமன் மொபைலிட்டி கார்டு எனும் ரீசார்ஜ்கார்டு திட்டம் பெங்களூருவில் அறிமுகப்படுத்தபடவுள்ளது.
- 'ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விரைவில் 12 செயற்கைக்கோள்கள் ஏவப்பட உள்ளன' என இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.
- 10 ஆண்டுகளுக்கு மேல் காத்திருக்கும் 2லட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

# 10 அருமையான உறுதிமொழியான வாக்குத்தத்தங்களை உனக்கு சொந்தமாக்கிக்கொள்

1. மத்.17:20 - நீ விசுவாசித்தால் எல்லாம் கூடும்.
2. மத்.21:21 - நீங்கள் சந்தேகப்படாமல் விசவாசித்தால்...
3. மாற்.11:22-24 எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ அவைகள்...
4. அப்.4:12; 1பேது.5:13 - இரட்சிப்பு
5. மாற்கு அதி.6; லூக்.12:28 - அநுதின தேவைகள் எல்லாம் கிடைக்...
6. ரோம.5:2 - தேவனிடத்தில் சேறும் சிலாக்கியம்.
7. ரோம.1:17 - கிறிஸ்தவ வாழ்வில் வெற்றி...
8. கலாத்.3:14 - பரிசுத்த ஆவியானவரால் கிடைக்கும் நன்மை...
9. எபி.6:12 - வாக்குத்தத்தங்களை அடையலாமே!
10. யாக்.5:14-16 - சரீர சுகம் கிட்டுமே!

**- ஜான் எஸ்.நாதன், சென்னை**

# சபை அங்கத்தின் சமாசாரம்

*-John Thiesen*

**கேள்வி:** சபை அங்கத்தினனாய் மாறாமல் நான் கிறிஸ்துவின் சீஷனாக இருக்க முடியுமா?

இல்லை. இது இயலாதது. கிறிஸ்து தம்சபையிலிருந்து பிரிந்திருக்க முடியாது என்பதே இதன் காரணம். இது "அவருடைய சரீரம்" அவருடைய நிறைவாகிய சபை" (எபே.1:23).

தேவன் உலகமுண்டானது முதற்கொண்டே சபையைத் திட்டம்பண்ணினார். அவர் சபையாகிய **ஒரே சரீரத்தில்** யூதர்களையும் புறஜாதிகளையும் இரட்சிக்க திட்டமிட்டார் (எபே.1:23).

இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் சபையிலே சேர்க்கிறார் என வேதாகமம் கூறுகிறது (அப்.2:47). சபையானது கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்ப வந்து தங்கள் பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்களாலும் உருவாக்கப்பட்டது (அப்.2:38.41.47)

சபையல்ல. கிறிஸ்துவே இரட்சிக்கின்றார் என்பது உண்மையாக இருந்தபோதிலும். **நாம் சபைக்கு வெளியே இருந்து கொண்டு இரட்சிக்கப்பட முடியாது.** ஏனென்றால் இது இரட்சிக்கப்பட்டவர்களால் ஆனது! கர்த்தர் நம்மை இரட்சிக்கிற போது. நாம் தாமாகவே அவருடைய சபையாகிய அவருடைய சரீரத்தின் அங்கங்களாக மாறுகின்றோம்.

*-The Voice Of Truth International*

## ஜெபியுங்கள்



- புதுவருட ஊழியங்களுக்காக...
- கர்த்தருடைய ஊழியத்தைசெய்யும் ஊழியர்களுக்காக...
- 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை தாங்கும் குடும்பங்களுக்காக...
- நம் நாட்டிற்காக, வரவிருக்கும் சட்டமன்ற தேர்தலுக்காகவும்...
- வாலிபர்களும், வாலிப பிள்ளைகளும் காக்கப்படும்படியாக...
- கர்த்தருக்குள் நித்திரையடைந்த சகோ. V. S. லாரன்ஸ், சேலம் அவர்களுடைய குடும்பத்திற்காக...

சரித்திர ஆய்வு

# "நேசகுமாரன் இயேசு"

**பிதா, அவர் அப்பா அல்ல என்பதற்கு வேதாகமச் சான்றுகள்**

John S.Nathan,
Gospel Minister
Mobile: 94444 43378



யோவான்5:17-43 "... (இயேசு) என் **பிதா** இதுவரைக்கும் கிரியை செய்துவருகிறார். நானும் கிரியை செய்துவருகிறேன்.... **பிதாவானவர்** செய்யக் **குமாரன்** காண்கிறதெதுவோ அதையேயன்றி வேறென்றையும் தாமாய்ச் செய்யமாட்டார். **அவர்** எவைகளைச் செய்கிறாரோ. அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார் வசனம்19. "...பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து. தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார். வசனம்20 **பிதாவானவர்** மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல. (இயேசுவும்) குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை **உயிர்ப்பிக்கிறார்**. அன்றியும் பிதாவைக் கனம் பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு **பிதாவானவர்** தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல். நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் **குமாரனுக்கு** ஒப்புக்கொடுத்திருக்கிறார் வசனம் 21-22. **குமாரனைக் கனம் பண்ணாதவன்** அவரை அனுப்பின **பிதாவையும்** கனம் பண்ணாதவனாயிருக்கிறான். வசனம்23 "**என்னைக்** குறித்துச் சாட்சி கொடுக்கிறவர் வேறொருவர் இருக்கிறார் வசனம்32. யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு அதென்னவெனில் நான் நிறைவேற்றும்படிக்குப் **பிதாவானவர்** எனக்குக் கற்பித்ததும் நான் செய்துவருகிறதுமான கிரியைகளே. **பிதா** என்னை அனுப்பினார் என்று என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறது (வசனம்36). என்னை அனுப்பின **பிதா** தாமே **என்னைக் குறித்துச்** சாட்சி கொடுத்திருக்கிறார். நீங்கள் **ஒருக்காலும்** அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை. அவர் ரூபத்தை கண்டதுமில்லை. அவர் அனுப்பினவரை (இயேசுவை) நீங்கள் விசுவாசியாதபடியால். அவருடைய வசனம் உங்களில் தரித்திருக்கிறதுமில்லை வசனம் 37-38. வேதவாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள் அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே. என்னைக் **குறித்து** சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே.

2. மத்.6:9.10 இயேசு சீடர்களுக்கு ஜெபிக்க வேண்டிய மாதிரி (Model Prayer) ஜெபத்தில் "...பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே (இயேசு. மற்றும் அவரை பின்பற்றுகிறவர்களின் பிதா) என்று இயேசுவே அழைத்ததினால் இயேசு பிதா அல்ல. தினமும் அதின் உண்மையானபொருள் இன்னதென்று அறியாமல். யோசித்து பார்க்காமலே அவசர. அவசரமாய் ஜெபிக்கிறீர்களே என்றாவது.

எப்போதாவது இதனின் அர்த்தத்தை அறிய எண்ணியதுண்டா சகோதரனே. சகோதரியே!

3.யோவான்3:16 உலக மக்களில் குறைந்தது 75 கோடி விசுவாசிகளுக்கு மனப்பாடமாக தெரிந்த வேத வசனம் இதுவே. உலகபோதகர்களில் அடிக்கடி மேற்கோள் காட்டி பிரசங்கிக்கும். எழுதும் வசனமும் இதுவேயாகும். தேவன் (பிதா) "தம்முடைய ஒரேபேறான குமாரனை (இயேசுவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவனும் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு. அவரைத்தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். இங்கு பிதா. இயேசுவை "ஒரே பேறானவர்" என்கிறார். ஏனெனில் பிதாவின் நேசகுமாரன் இயேசு ஒருவரே. நாமெல்லாரும் அவரின் சுவிகாரபுத்திரர்களாகும் படிக்கு கிறிஸ்து இயேசுவுக்குள் தெரிந்துகொள்ளப்பட்டோம் எபே.1:4.5. "காலம் நிறைவேறினபோது... நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால். அப்பா பிதாவே என்று கூப்பிடத்தக்கதாக **தேவன்** (பிதா) தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்" கலா.4:5. "...கிறிஸ்து மூலமாய் தேவனுடைய சுதந்தரராயுமிருக்கிறாய் வசனம்6 மேலும் தம்முடைய (பிதாவின்) குமாரன் (இயேசு) அநேக சகோதரருக்குள்ளே (First born. in Greek PROTOTOKGS) **முதற்பேறானவராயிருக்கும்** பொருட்டு. தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். ரோமர்8:29. இங்கு **இயேசு** தமது **முதற்போரானவர்** எனவும். நாமெல்லாரும் அவரின் சாயலானவர் என்று கூறியுள்ளதினால் குமாரனாகிய இயேசு நமது **பிதா** அல்லவே. அவர் நமது மூத்த சகோதரர்.... தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர். அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவத்தினாலே பூரணப் படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது... யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள். இதினிமித்தம் அவர்களை (நம்மை) **சகோதரரென்று** சொல்ல (இயேசு) அவர் வெட்கப்படாமல் எபி.2:10.11 இங்கேயும் இயேசு நமது சகோதரர் தான் என உறுதியாகக் கூறப்பட்டுகிறது. "தம்முடைய ஒரேபேறான **குமாரனாலே** (இயேசுவால்) நாம் பிழைக்கும்படிக்கு **தேவன்** (பிதா) அவரை இவ்வுலகத்தில் அனுப்பினார் 1யோவா.4:9.

4. உலக மக்கள் கவர்ந்தன M.K. காந்தியை. மகாத்துமா காந்தியாக்கக் காரணமான மலை பிரசங்கத்திலே மத்.5:16-ல் செய்தியளித்த இயேசு. உங்கள் (பரலோக) **பிதாவை** மகிமைப்படுத்தும்படி என்றதிலிருந்து இயேசு **பிதா** இல்லை என கூறியுள்ளதை எப்போதாவது சிந்தித்ததுண்டா? வசனம் 48-ல் பரலோகத்திலிருக்கிற இயேசு பூலோகத்தில் இருந்தபோது உங்கள் **பிதா** (இயேசுஅல்ல) பூரணசற்குணராயிருந்தது போல..." என்றதிலிருந்து இயேசு **பிதா** அல்லவே அல்ல என்பதை என்றாவது அறிந்துள்ளோமா? சிந்தித்து இருக்கிறோமா?

- தொடரும்...

சிறுவர் பகுதி

# பூமியிலிருந்து அகற்றவேண்டும்

வேத பகுதி: அப்போஸ்தலர்22:17-22



**அப்போஸ்தலனாகிய பவுலை** அறியாதவர்களே இருக்க முடியாது ஏனென்றால் பரிசுத்தவேதாகமத்திலே அவர்தான் அதிகமான புத்தகங்களை எழுதியிருக்கிறார். அப்படிப்பட்ட ஒரு பரிசுத்தவானை முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஜனங்கள் அவனை பூமியிலிருந்து அகற்றவேண்டும் என்று சொன்னார்கள் சொன்னவர்கள் வேறுயாரும் அல்ல அவனுடைய சுய ஜனத்தார்களே! அவனுக்கு விரோதமாக மிகுந்த சத்தமிட்டனர். இன்றைக்கும் அப்படித்தான் சுய ஜனங்கள் நம்மை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதைப்போல பவுலை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் ஞானஸ்நானம் பெற்று பின்பு எருசலேமுக்குத் திரும்பிவந்து. தேவாலயத்திலே ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கையில். ஞானதிருஷ்டியடைந்து அவரைக் (கர்த்தரைத்) தரிசித்தான். அப்பொழுது அவர் அவனை நோக்கி: நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்: ஆதலால் நீ தாமதம்பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போ என்றார்.

அதற்கு பவுல்: ஆண்டவரே. உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெபஆலயங்களில் அடித்ததையும். உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது நானும் அருகே நின்று அவனைக் கொலைசெய்வதற்குச் சம்மதித்து. அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டிருந்ததையும். இவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றான். அதற்கு அவர்: நீ போ. நான் உன்னைத் துரமாய் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன் என்றார்.

அந்தப்படியாக அப்போஸ்தலனாகிய பவுலை தேவன் எடுத்துபயன் படுத்தினார். அவன் மூன்று சுவிசேஷப்பயணத்தினால் அநேக சபைகளை ஏற்படுத்தினான். மேலும் 14 நிருபங்களையும் எழுதினான். அவன் சொல்லும்போது எருசலேம் துவக்கிச் சுற்றிலும். இல்லிரிக்கம் தேசம்வரைக்கும். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன் என்கிறார். அவர் காலதாமதம் செய்யாமல். தேவனுடைய வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு. தாமதமில்லாமல் ஊழியம் செய்யும்படியாக கடந்து சென்றார். இந்தப்பவுலைப்போல கர்த்தருக்கு நீங்களும் எதிர்காலத்தில் ஊழியம் செய்வீர்களா?

**மனப்பாட வசனம்**

**"தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்படமாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக்கா4:24)**

# வேத அறிவுப் போட்டி எண்: 123

போட்டியாளாகள் கவனத்திற்கு

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25 ஆம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன் உயிர்தப்பிப் பிழைத்தேன் என்று சொல்லி அந்த ஸதலத்துக்கு என்ன பெயரிட்டான்?
2. பாவம் பூரணமாகும்போது எதைப் பிறப்பிக்கும்?
3. நீ என முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது என்று கர்த்தர் யாரிடம் சொன்னார்?
4. எப்பபடிப்பட்ட இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள் என்று எந்த அப்போஸ்தலன் எழுதுகிறார்?
5. செவிடனை நிந்தியாமலும், குருடனுக்கு முன்னே எதை வையாமலும், உன் தேவனுக்குப் பயந்திருப்பாயாக என்று யாரை நோக்கி கர்த்தர் பேசினார்?
6. அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
7. தன் வஸ்திரங்கள் கழற்றப்பட்டு அவனுடைய குமாரருக்கு உடுத்தியவுடன் அங்கே மலையின் உச்சியில் மரித்த ஆசாரியன் யார்?
8. உலகமும் அதின் இச்சையும் எப்படிப்போம்?
9. மோசே நமக்கு ஒரு நியாயப்பிரமாணத்தைக் கற்பித்தான் அது யாருடைய சபைக்குச் சுதந்தரமாயிற்று?
10. இப்போது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும்? அவருடைய எதுவும் உண்டாயிருக்கிறது என்று யோவானுக்கு வெளிப்படுத்தப் பட்டது?

## கிறிஸ்துவின் சபையார் வழங்கும் தமிழ் நிகழ்ச்சிகள்

**சத்தியவழி வானொலி நிகழ்ச்சிகள்** *செய்தியாளர்* -சகோ.பி.ஆர்.சாமி

இலங்கை ஆசிய சேவை 25 மற்றும் 41 மீட்டரில் ஞாயிறு முதல் வெள்ளி வரை தினமும் மாலை 5.30 மணி

*தொடர்பு முகவரி:* சத்திய வழி, தபால் பெட்டி எண்-8405, பெங்களூரு-84

போன்-080-25463507-09844070763 **E-mail:** prsdoug@hotmail.com

**திருமறை தியானம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்** *செய்தியாளர்* -சகோ.ராஜநாயகம்

**தமிழன் TV யில் சனி காலை 7.15 மணி**

**தமிழன் TV யில் திங்கள் காலை 7.00 மணி**

**இமயம் TV யில் வியாழன் காலை 6.00 மணி**

*தொடர்பு முகவரி:* திருமறை தியானம், தபால் பெட்டி எண்-27, காங்கேயம்-638 701

போன்-04257 230030, 989427 30362 **E-mail:** rajarichal@yahoo.co.in

**கிருபையுள்ள வார்த்தை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்** *செய்தியாளர்* -சகோ.பிலேமோன் ராஜா

**Z தமிழ் TV யில் வெள்ளி காலை 5.30 மணி**


**தமிழன் TV யில் ஞாயிறு காலை 7.45 மணி**

*தொடர்பு முகவரி:* கிருபையுள்ள வார்த்தை, தபால் பெட்டி எண்-15, அரசரடி, மதுரை-625 010.


போன்-0452-2607026, 92442 14421 **E-mail:** pcpr@graciousword.org, Web:www.graciousword.org

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

**R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2009-2011**
**Posted at Batlagundu Post Office on 10th Nov. 2010**



ARJUNAN PREACHING



GLORY CONDUCTING WOMEN'S MEETING

**உங்கள் வானொலியில்**

இலங்கை ஆசிய சேவை
SW 25 முதல் 41 மீட்டரில்
ஒவ்வொரு சனிக்கிழமை மாலை
5.30 முதல் 5.45 மணி வரை
கேட்டு பயன் பெறுங்கள்

**உங்கள் தொலைக்காட்சியில்**

**TAMILAN TV**
EVERY Monday 6.00 - 6.15 a.m
**IMAYAM TV**
EVERY Wednesday 6.30 - 6.45 a.m

**BATLAGUNDU CHURCH OF CHRIST**
*MEETS HERE*
**17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202, DINDIGUL DISTRICT, S.INDIA.**
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: thewordofchrist@bsnl.in

*Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA